**லுனுகல பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 08 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து லுனுகல பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபைக்குரிய 06 கட்டிடங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரித்து தொடர்பாக திட்டவட்டமாக உறுதிப்படுத்தி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படும். |
| (ii) | மீளாய்வாண்டின் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த கலைமகள் தமிழ் வித்தியாலயத்தின் நீர் வழங்கல் செயற்திட்டத்திற்கான ரூபா 32,203 தொகை கூடுதலாக கடன் கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கணக்குகள் தயாரிக்கும் போது நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீராக்கப்படும். |
| (iii) | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்குரிய நீதிமன்றத் தண்டப்பணம் இனங்காணப்பட்டு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானக் கணக்கில் | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கணக்குகள் தயாரிக்கும் போது நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீராக்கப்படும். |

காண்ப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி சேமிப்புக் கணக்கு ஒன்றில் காணப்பட்ட ரூபா 385,587 பெறுமதியான மீதி ஒன்றின் நிதி நிலைமை தொடர்பாக காசு மற்றும் காசுக்கு சமனானவற்றின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கணக்குகள் தயாரிக்கும் போது நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீராக்கப்படும். |
| (v) | மீளய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த மற்றும் நன்கொடையாகக் கிடைத்த நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 74,075 இனால் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கணக்குகள் தயாரிக்கும் போது நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீராக்கப்படும். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் உரிய பதிவேடுகளின் மீதிகளுக்கு இடையே ரூபா 15,795,447 ஆன வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | உரிய பதிவேடுகள் மற்றும் அட்டவணை என்பன சரியான முறையில் நாளது வரையறுக்கப்பட்டு இணக்கமின்மை களுக்கான காரணம் கண்டறியப்பட்டு சீராக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**(இ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ரூபா 64,917,802 பெறுமதியான காணி மற்றும் கட்டிடம் என்பனவற்றின் மீதி தொடர்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டாளர் ஒருவரின் அறிக்கை மற்றும் ஆய்வறிக்கை என்பன சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் கணக்காய்வின் | கணக்காய்விற்கான சான்றுகள் கணக்குகளுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் மதிப்பீடு செய்வதற்கு உத்தேசித்துள்ளதுடன் அதன் பின்னர் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

போது திருப்திகரமான முறையில் சான்றுறுதிப் படுத்தப்பட முடியாதிருந்தது.

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | | |
| (i) | 139 ஆம் பிரிவு | ஆதனவரி விதிப்பதன் கீழ் ஏதாவதொரு வீடு, கட்டிடம், காணி அல்லது வீட்டுத்தொகுதி என்பவற்றின் வருடாந்த பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு முடியுமான வகையில் தவணை அறிக்கை கோரப்பட்டிருக்கவில்லை. | சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தவணை அறிக்கை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 2019 ஆம் ஆண்டில் ஆதன வரி மதிப்பிடப்பட்டுள்ளது. |
| (ii) | 159 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 706,845 தொகையான நிலுவை வருமானம் அறவிடப்படவில்லை. | சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (iii) | 158, 162 மற்றும் 163 ஆம் பிரிவுகள் | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 339,811 தொகையான நிலுவை ஆதனவரி அறவிடப் பட்டிருக்கவில்லை. | சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | வயல்காணிகளுக்காக ஏக்கர் வரி கமநல சேவைகள் அமைப்பிற்கு கொடுப்பனவு செய்யப்படுவதால் அறவிட முடியாமல் இருந்ததாகவும் எதிர்காலத்தில் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | பொது நிர்வாக சுற்றறிக்கை 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | சபைக்குரிய 10 வாகனங்களுக்குரிய எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் எரிபொருள் எரிவு பரீட்சிக்க நடவடிக்கை எடுக்கப்படும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,624,747 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,464,147 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,667,000 | 1,650,989 | 1,234,376 | 414,613 | 1,607,000 | 1,657,331 | 1,157,212 | 500,120 |
| (ii) | வாடகை | 7,304,950 | 5,509,241 | 4,150,725 | 1,358,516 | 6,649,625 | 4,156,830 | 3,504,825 | 652,005 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,122,000 | 914,692 | 914,692 | - | 906,000 | 806,909 | 806,909 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 5,960,000 | 6,743,728 | 753,637 | 5,996,091 | 3,656,000 | 3,975,345 | 975,345 | 3,000,000 |
| | மொத்தம் | 16,053,950 | 14,818,650 | 7,053,430 | 7,769,220 | 12,818,625 | 10,596,415 | 6,444,291 | 4,152,125 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 14,818,650 தொகையான மொத்த வருமானத்தில் ஆண்டின் இறுதி வரையிலும் ரூபா 7,769,220 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | இந்நிலுவை தொகையில் நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் |

| | | |
|---|---|---|
| அது மொத்த சிட்டையிடப்பட்ட வருமானத்தில் 52 சதவீதம் ஆகும். | | தற்போது இத்தொகை கிடைத்துள்ளது. |

**2.2.3 வீதவரியும் வரியும்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ரூபா 224,998 தொகையான ஆதனவரி வருமானத்தில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 74,118 தொகை சேகரிக்கப்படாதிருந்ததுடன் அது மொத்த சிட்டையிடப்பட்ட வருமானத்தில் 33 சதவீதமாகும். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 336,656 தொகையான நிலுவை ஆதனவரி வருமானத்தில் ஆண்டின் போது ரூபா 265,693 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் அவ்வாறு அறவிடப்படாத தொகை ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவையில் 79 சதவீதமாகும். | நிலுவை ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வீத வரி அறவிடும் போது வயல் காணிகளுக்காக பட்டியலிடப்பட்டுள்ளது டன் அவ்வருமானத்தை அறவிடுவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.2.4 நீர்க்கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்படாது காணப்படுகின்ற ரூபா 1,085,458 தொகையான நீர்க்கட்டணம் அறவிடப்படவில்லை. | நிலுவை நீர்க்கட்டணம் அறவிடப்பட வேண்டும். | அறவிடப்பட வேண்டிய நீர்க் கட்டணங்களில் அறவிட முடியாதவற்றை துண்டிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**2.2.5 வருடாந்த ஆதன வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி காணப்படுகின்ற ரூபா 3,071,457 தொகையான ஆதன வரி அறவிடப்படவில்லை. | நிலுவை ஆதன வரி அறவிடப்பட வேண்டும். | சட்ட நடவடிக்கைகள் மூலம் நிலுவை ஆதன வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**2.2.6 கடை வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 706,845 தொகையான வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். | சட்ட நடவடிக்கைகள் மூலம் நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**2.2.7 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊவா மாகாண சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 9,090,092 தொகை மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 2,863,150 தொகை என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | தற்போது இந்நிலுவை அறவிடப்பட்டுள்ளது . |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் 7 விடயங்கள் தொடர்பாக உபவிதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகள் பிறப்பிக்கப்படாத விடயங்களுக்காக உபவிதிகள் பிறப்பிக்கப்பட வேண்டும். | இதுவரையிலும் பிறப்பிக்கப்படாதிருந்த 7 உப விதிகளை பிறப்பிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படாதிருந்ததுடன் அதற்கமைய ஆண்டினுள் ஈட்டிக் கொள்ள வேண்டிய நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு உரிய செயற்பாடுகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. இதனால் வருடாந்த செயலாற்றுகையை மதிப்பிடுவதற்கு முடியாதிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் | 2019 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படும் |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகளின் ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030’’ தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், சபைக்குரியதாக முடியமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்கு அடைதலின் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | இலக்குகளை தெளிவாக இனங்காணப்படாமல் இருந்ததுடன் எதிர்காலத்தில் நோக்கங்கள் மற்றம் இலக்குகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

**பதவியணி வெற்றிடம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 பதவிகளுக்குரியதாக காணப்பட்ட 03 வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. | பதவியணியினரின் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வாகனங்களின் உரித்தை கையேற்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்படும் 06 வாகனங்கள் சட்டரீதியான உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்க வில்லை. | சபைக்குச் சொந்தமான வாகனங்களின் சட்டரீதியான உரித்து கையேற்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வாகனங்களின் உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.4 பெறுகை செயற்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காகப் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

**4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பிரதேச சபையில் உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட | உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(01) ஆம் இலக்க உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டி தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்றை தாபிக்க வேண்டும். | எதிர்காலத்தில் கணக்காய்வுக் குழுவொன்றை தாபித்து கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |